செ.வெ.எண்:651 13/8/08

# சிறுசேமிப்பு குறித்த பத்திரிகை செய்தி

சிறுசேமிப்பு துறையின் மூலம் வசூலிக்கப்படும் தொகை, மாநில அரசின் வளர்ச்சித்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. மாநில அரசின் நிதி பற்றாக்குறையை சரிசெய்யவும் இது உதவுகிறது. சிறுசேமிப்பு திட்டங்கள் மூலம் திரட்டப்படும் நிதி முழுவதுமாக மத்திய அரசால் மாநில அரசுகளுக்கு நீண்ட கால கடனாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு, மாவட்டங்களுக்கு சிறுசேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, மாவட்ட அதிகாரிகளின் மூலம் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டப்படுகிறது. சிறுசேமிப்பு நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது.

சிறுசேமிப்புத் துறையில் கிஸான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு, பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் , மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம், அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம், ஓராண்டு, இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் வைப்பு கால முதலீடு போன்ற பல்வேறு திட்டங்களில் மக்கள் முதலீடு செய்யலாம். கடந்த காலத்தில் அரசுக்கு கோடிக்கணக்கான நிதி சிறுசேமிப்பின் மூலம் திரட்டப்பட்டது.

இப்பொழுது வங்கியில் தரப்படும் வட்டி கூடுதலாக இருப்பதால் சிறுசேமிப்பு திட்டங்களுக்கு வசூலில் சற்று தேக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாற்றப்பட்டு சிறுசேமிப்பு திட்டங்களுக்கு அதிக வட்டியினை பெற்றுத்தரவும், முகவர்களுக்கு உரிய ஊக்கத்தொகையை அதிகப்படுத்தவும் தமிழக அரசின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அஞ்சலக தொடர் வைப்புத்திட்டம் முழுவதும் மகளிர்கள் முகவர்களாக இருந்து செயல் படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சிறுசேமிப்புத்துறைக்கு பல கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டு இருக்கிறது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிறுசேமிப்புத்துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர் மூலம், மாவட்ட நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு சிறுசேமிப்பு வசூல் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வசூல் இலக்கினை அதிகாரிகள் அனைவரும் திரட்டித்தர ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் மட்டுமல்லாமல் சிறுசேமிப்புத் துறையின் திட்டங்களைப்பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் விதத்தில் விளம்பரங்கள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் சுமார் 50000 முகவர்கள் முதலீட்டுதாரர்களுக்கு சேவை செய்கின்றனர். இதில் சுமார் 30000 பேர் மகளிர் முகவர்கள் ஆவர். முகவர்களுக்கு அவர்கள் திரட்டித்தரும் சிறுசேமிப்பு நிதிக்காக ஊக்கப்பரிசுகள் வழங்கும் திட்டமும் உள்ளாட்சி அமைப்பிகளின் வளர்ச்சிப்பணிகளுக்காக சிறுசேமிப்பு நிதி மூலம் சிறுசேமிப்பு ஊக்க நிதி தரும் திட்டமும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

சென்னை மாவட்டத்தில் முன்னிட்டு சிறந்த சம்பளப்பட்டியல் நிறுவனமாக ஐந்து நட்சத்திர ஓட்டல் தாஜ் கொரமண்டல் தேர்ந்தெடுக்கப்பட்டு சம்பளப்பட்டியல் சேமிப்பு தினத்தன்று பரிசுகள் வழங்கப்பட்டன. அங்குள்ள 250 தொழிலாளர்கள் மூலம் மாதாமாதம் ரூ, 32,000/– சிறுசேமிப்பில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் தொடர் வண்டி இணைப்புப் பெட்டி தொழிற்சாலை, தமிழ்நாடு தேர்வாணையம் உள்ளிட்ட பல அரசு நிறுவனங்களில் சம்பளப்பட்டியல் சேமிப்புத் திட்டம் சிறந்த முறையில் செயல் படுத்தப்படுகிறது.

தற்பொழுது சென்னை நகரில் 2006–07 ம் சிறுசேமிப்பு வசூலில் சிறந்து விளங்கிய கீழ்கண்ட அஞ்சல் அலுவலர், மகளிர் முகவர்கள் மற்றும் சம்பளப்பட்டியல் சேமிப்பு குழுத்தலைவர்களுக்கு கேடயமும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | பெயர் | பரிசு விவரம் |
|---|---|---|---|
| 1 | சிறந்த அஞ்சலகம் | தியாகராயநகர் தலைமை அஞ்சலகம் | கேடயம் |
| 2 | சிறந்த மகளிர் முகவர் முதலிடம் | தி. சரஸ்வதி, திநகர், சென்னை –17 | பாராட்டுச் சான்றிதழ் |
| 3 | சிறந்த மகளிர் முகவர் இரண்டாமிடம் | திருமதி வி. மம்தா கோவரச்சா, கெல்லீஸ், சென்னை–10 | பாராட்டுச் சான்றிதழ் |
| 4 | சிறந்த மகளிர் முகவர் மூன்றாமிடம் | திருமதி எச். மீராபாய், சௌகார்பேட்டை, சென்னை–79 | பாராட்டுச் சான்றிதழ் |
| 5 | சிறந்த சம்பளப்பட்டியல் சேமிப்பு குழுத்தலைவர் | திரு எஸ். ஸ்ரீராமுலு, தலைமை பணியாளர் நன்நல ஆய்வாளர், தொடர் வண்டி இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ICF) , சென்னை | பாராட்டுச் சான்றிதழ் |

சிறுசேமிப்பு பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக சிறுசேமிப்பின் முக்கியத்துவம் குறித்து அவ்வப்பொழுது உரை நிகழ்த்துகிறேன். சிறுசேமிப்புத்துறைபற்றியும் அதன் ஆக்கப்பூர்வமானவளர்ச்சி குறித்து தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு நடத்தி வருகிறேன். ஏற்கனவே கோவை, மதுரை, திண்டுக்கல், திருவள்ளூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. தற்பொழுது சென்னை மாநாராட்சியில் சிறுசேமிப்பு வசூல் வளர்ச்சி குறித்து அதன் துணை இயக்குநர், மாவட்ட சேமிப்பு அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்களுடன் ஆய்வு நடத்துகிறேன். இது போன்ற ஆய்வுக் கூட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் தொடர்ந்து நடைபெறும்.

தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதை காட்டிலும் அஞ்சலக சிறுசேமிப்பு திட்டங்களில் முதலீடு செய்வது முழு பாதுகாப்பானது. நாட்டின் நலன் கருதியும் வீட்டின் நலன் கருதியும் மக்கள் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9